**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

O.S. 13/2009 தேதி **:** 13-02-2025

வா.சா. 1 – ராமாரெட்டி

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 7 முதல் 12 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1.. 7 முதல் 12 பிரதிவாதிகள் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 7 முதல் 12 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் நாராயண ரெட்டி என்றால் சரிதான். 7 முதல் 12 பிரதிவாதிகள் எனக்கு நெருங்கிய உறவினார்கள் என்றால் சரிதான். தாவா B அட்டவணையில் உள்ள 8, 11 இலக்க சொத்துக்களில் எனக்கு உரிமை இல்லை என்று தான் 7 முதல் 12 பிரதிவாதிகள் எதிர் வழக்காடி வருகிறார்கள் என்றால் அந்த சொத்து எனது சொத்து என்கிறார். சர்வே எண் 668 ன் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. அதன் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 55 செண்டு என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ 7 கிரய ஆவணப் பிரகாரம் P. N. நாராயணரெட்டி 3.55 ஏக்கர் நிலத்தை கிரயம் பெற்றிருப்பதாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த ஆவணம் பொய்யானது என்கிறார். மேற்படி P. N. நாராயணரெட்டி 3.55 ஏக்கர் சொத்தில் 1 ஏக்கர் 11 செண்டை வா.சா.ஆ 8 மூலமாக லஷ்மம்மா என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் லஷ்மம்மா கிரயம் வாங்கியது தெரியாது என்றும் எனது அப்பா கிரயம் வாங்கியது மட்டும் தெரியும் என்கிறார். சர்வே எண் 668/1 ஐ லஷ்மம்மா ராமசாமி என்பவருக்கு கிரயம் கொடுத்து , ராமசாமி எனது தகப்பனாருக்கு கிரயம் கொடுத்து அந்த சொத்து எங்களுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். UDR க்கு முன்பு சர்வே எண் 668 உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. எனது தகப்பானார் விஸ்தீரணம் உள்ள சொத்தை யார் யாரிடம் இருந்து கிரயம் வாங்கினார் என்றால் அது தெரியாது. எனது தகப்பானார் கிரயம் பெற்ற சொத்துக்கள் UDR பட்டாவின் அடிப்படையில் பாத்தியது என்று தான் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சுயாட்சிதமாக வாங்கிய சொத்தை எனது அப்பா கிரயம் வாங்கியுள்ளார் என்கிறார். தாவா சொத்து காலியாக உள்ளது என்றால் சரியல்ல கோழி

பண்ணை செட் போடப்பட்டுள்ளது என்கிறார்.

3. P. N. நாராயணரெட்டி பெயரில் கிரயம் இருக்கும் போது UDR பட்டாவின் அடிப்படையில் எனது தகப்பனார் கிரயம் பெற்றது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பட்டா உரிமை மூல ஆவணம் ஆகாது என்றும் அதனடிப்படையில் எனது தகப்பானார் கிரயம் பெற்றது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. குர்ரம்மா என்பவர் P. N. நாராயணரெட்டி என்பவரிடம் இருந்து சர்வே எண் 670 ஐ கிரயம் பெற்றுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது என்றும் எனது தகப்பானர் கிரயம் பெற்றது மட்டும் தெரியும் என்று சாட்சி சொல்கிறார். சர்வே எண் 670 ஐ குர்ரம்மா கிரயம் வாங்கி விட்டு சர்வே எண் 668 ஐ கிரயம் செய்தத்து செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நரசிம்ம ரெட்டிக்கு எந்த வித உரிமை மூல ஆவணமும் கிடையாது என்றும் அவர் சர்வே எண் 668/3 ஐ கிரயம் செய்தது செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. அவர்கள் ஆவணம் தவறானது என்றும் எங்கள் ஆவணம் சரியானது என்றும் சாட்சி தன்னிச்சையாக சாட்சியம் அளிக்கிறார்.

4. வா.சா.ஆ 10 முதல் 12 வரையிலான ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் எங்கெங்கு உள்ளன என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் எனது அப்பா கிரயம் வாங்கியது மட்டும் தான் எனக்கு தெரியும் என்றும் சாட்சி சொல்கிறார். வா.சா.ஆ 10 விடுதலை பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ 11 அடமானப் பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ 12 அடமானப்பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கள் பற்றிய எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றும் வழக்கு சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 7 ம் பிரதிவாதி ஜெயராம ரெட்டி வழக்கு நடத்திய விவரம் தெரியுமா என்றால் தெரியும். 7 ம் பிரதிவாதியின் வழக்கு என்னவென்று தெரியுமா என்றால் தெரியாது. நான் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் அசல் வழக்கு 179/1997 வழக்கு பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் அது தள்ளுபடி ஆகி விட்டது என்கிறார். அந்த வழக்கை யார் தாக்கல் செய்தார்கள் என்றால் மூத்த வழக்கறிஞர் வெங்கட்ராம ரெட்டி தாக்கல் செய்துள்ளார் என்கிறார். அந்த வழக்கில் இந்த வழக்கு சொத்துக்கள் சேரவில்லை என்று சொல்கிறார்.

5. என்னுடைய வழக்கையும் அதே மூத்த வழக்கறிஞர் வெங்கட்ராம ரெட்டி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்யும் வரை எனக்கும் ஜெயராம ரெட்டிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். நானும் ஜெயராம ரெட்டியும் பழைய வழக்கை நடத்தும்போது ஒன்றாக தான் சேர்ந்து சென்று வருவோம் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் உள்ள போது தான் இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. ஜெயராம ரெட்டி மீது கொடுக்கப்பட்டுள்ள குற்ற வழக்கு பற்றிய விவரமும் , எதற்காக கொடுக்கப்பட்டது என்ற விவரமும் தெரியுமா என்றால் தெரியாது. ஜெயராம ரெட்டி தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 2/2010, 3/2010, 4/2010, 5/2010, 9/2010 ஆகிய வழக்குகள் எந்த நீதிமன்றத்தில் நடந்தது எதற்காக தாக்கல் செய்யப்பட்டது போன்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்குகள் அனைத்தும் ஜெயராம ரெட்டியால் தாக்கல் செய்யபடவில்லை என்றும் அவர்கள் அந்த வழக்குகளில் பிரதிவாதிகளாகத்தான் இருந்தார்கள் என்றும் அந்த வழக்குகள் தள்ளுபடி செய்யபட்டது என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய முன் பாத்தியஸ்தருக்கே தாவா சொத்துக்களில் பாத்தியம் இல்லாதபோது எனக்கும் பாத்தியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. P. N. நாராயணரெட்டிக்கு சுயாட்சிதமாக பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நானும் மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் இந்த வழக்கு செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா B அட்டவணை சொத்தில் உள்ள 8, 11 இலக்க சொத்துக்கள் வாதி , 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் இல்லை என்றும் அவை 7 முதல் 12 பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur